பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நடவடிக்கைக் குறிப்பில் இருந்து நீக்கி விட உத்தரவிட்டார்கள். அப்படி நீக்கப்பட்ட பகுதி "மறவன் மடல்" என்ற பத்திரிகையில் வந்திருக்கிறது, இது உரிமையை மீறிய செயலாகாதா?" என்று எழுப்பியிருக்கிறார்கள். நம் விதிகளின்படி இது உரிமையை மீறிய நிகழ்ச்சி தான். ஆயினும் நம்முடைய அவையில் 1965-லும், 1966-லும் இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்பட்டபோது குறிப்பிட்ட அந்த பத்திரிகைகளின் மீது பேரவைத் தலைவர் அவர்களே நடவடிக்கை எடுத்துக் கொள்வதாகத் தீர்ப்பு அளித்திருக்கிறார். அதைப்போலவே இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பிட்ட பத்திரிகை மீது நடவடிக்கை எடுத்துக்கொள்வார் என்று அறிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் ஒரு உரிமைப் பிரச்னையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதை நாளை மறு நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்

"டிஃபென்ஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் ஃபிஸியாலஜி அண்டு அலைடு ஸயன்ஸஸ்" என்ற நிறுவனத்தை சென்னையிலிருந்து டில்லிக்கு மாற்றுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி அவர்கள் shifting of Defence Institute of Physiology and Allied Sciences from Madras to Delhi என்ற பொருள் குறித்து விவாதிப்பதற்காக இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது மிக முக்கிய மான நிகழ்ச்சியாக இருந்தாலும், மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த தாக இருக்கிற காரணத்தாலே இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

5. அறிவிப்பு

திரு. எம். வி. பாலன் அவர்கள் குறிப்பிட்ட ஒரு காரியத்தைப்பற்றி ஆய்வு செய்ய துணைத்தலைவர் அறிவித்தபடி குழு அமைக்க தேவையில்லாத நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, நேற்றைய தினம் மாண்பு மிகு உறுப்பினர் திரு. பாலன் அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, அவர்கள் இந்த அவையிலே இல்லாதவரைப் பற்றிக் கருத்துகள் கூறினார்கள் என்றும், அதனால் அதற்கு அவர் நேரடியாகப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் எனக் கூறி, அதைப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டு, பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒரு கமிட்டி அமைப்பதாகக் கூறியிருக்கிறார்கள். ஆனால், சட்டமன்ற நிகழ்ச்சிக் குறிப்புக்களைப் பார்க்கும்பொழுது சில நிலைமைகள் தெளிவாகின்றன. அந்தக் கமிட்டி அமைக்கவேண்டிய அவசியம் இல்லாத நிலைமை இருக்கிறது. அதைப்பற்றி இங்கே கூற விரும்புகிறேன். 1957-ம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் தேதி இந்த மன்றத்தில் நிதிநிலை அறிக்கையை அந்நாள் நிதியமைச்சர் வைக்கும்பொழுது "கன்னியாகுமரிப் பகுதியைப் பொறுத்தவரை, அதைத் தனி ஜில்லாவாகவே வைத்துக் கொள்வதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது. திருநெல்வேலி மாவட்டத் தைச் சார்ந்த நாங்குனேரி தாலூக்காவை இம்மாவட்டத்திலிருந்து பிரித்து கன்னியாகுமரி மாவட்டத்துடன் சேர்க்கப்படும். அதன் பயனாக இரு மாவட்ட அதிகாரிகளுக்கும் வேலைச் சுமை ஓரளவு சமமாக்கப்படும்" என்று நிதிநிலை அறிக்கையிலே அது பிரிக்கப்படும் என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.